**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ம் நாள் வெள்ளிக்கிழமை**
**I.A.No.09/2025 in O.S.No.173/2022**

மா. குமார் (குடும்ப மேலாளர்) … மனுதாரர்/வாதி

**//எதிராக//**

1. தமிழ்நாடு அரசுக்காக அதன் மாவட்ட ஆட்சியர், கரூர்
2. கு. புஷ்பாதேவி, கோட்டாட்சியர் குளித்தலை
3. கலியமூர்த்தி, வட்டாட்சியர், குளித்தலை
4. காவல் ஆய்வாளர், குளித்தலை
5. செயல் அலுவலர், மருதூர் பேரூராட்சி
6. கோட்டாட்சியர் (சார் ஆட்சியர்) குளித்தலை
7. வட்டாட்சியர், குளித்தலை.

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 10.03.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.பாலசுப்ரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**உத்தரவு**

வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் இவ்வழக்கில் வாதி. தாவா சொத்தில் மனுதாரர் 2 குடிசை வீடுகள் கட்டி அனுபவித்து வந்தார். குடிசை வீட்டின் அருகில் சுமார் 30 வயதுடைய 2 வேப்ப மரங்கள் வளர்த்து வந்தார். அதன் அருகில்

பல ஜாதி மரங்கள் வளர்த்து வந்தார். 20.12.2022 அன்று எந்த வித முன் அறிவிப்பும் வாதிக்கு கொடுக்காமல் எதிர்மனுதாரர்கள் வாதி அமைத்திருந்த வேலியை அத்துமீறி உள்ளே நுழைந்து JCB இயந்திரம் மூலம் குடிசை வீடுகளை இடித்து தரை மட்டமாக்கி வேப்ப மரங்கள் மற்றும் பல்வேறு ஜாதி மரங்களை வெட்டி அப்புறப்படுத்தி தாவா சொத்தில் இருந்த வைக்கோல் போர்களையும் சேதப்படுத்தி சட்ட விரோதமாக வாதியை தாவா சொத்தில் இருந்து அப்புறப்பத்தியுள்ளனர்.

2) வாதியின் 2 குடிசை வீடுகளை இடித்து சேதப்படுத்தி தரை மட்டமாக்கி விட்டதால் மேற்படி வீட்டிற்கான இழப்பீடு கேட்க வேண்டியது அவசியமாகிறது. எனவே அசல் வழக்குரையை நஷ்ட ஈடு கேட்டு திருத்தம் செய்ய வேண்டி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இம்மனுவை அனுமதிக்கா விட்டால் வாதிக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும்.

<u>எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>

3) தாவா சொத்தில் மனுதாரர் குடிசை வீடு கட்டி அனுபவம் செய்து வருவதாக சொல்வதும் அதில் பல்வேறு மரங்கள் வளர்த்து வந்ததாக சொல்வதையும், 20.12.2022 அன்று எவ்வித முன் அறிவிப்பும் இன்றி வாதியை சட்ட விரோதமாக வெளியேற்றியதாக சொல்வதும் பொய்யான சங்கதிகள் ஆகும். தாவா சொத்தில் எந்த விதமான வீடோ, குடிசையோ இல்லை. அது அரசிற்கு பாத்தியப்பட்ட புறம்போக்கு நிலம் ஆகும்.

4) 2, 3 பிரதிவாதிகள் தங்களது வருவாய்த்துறை அதிகாரத்தை பயன்படுத்தி தாவா சொத்தில் இருந்த குடிசை வீட்டை இடித்து தரை மட்டமாக்கியதாக சொல்வதும், மனுதாரருக்கு ரூ.70,000/- இழப்பீடு தர வேண்டுமென கேட்டுள்ளது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல. இவ்வழக்கை முதலில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து விட்டு பிரதிவாதிகள் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்த பிறகு வழக்கு பரிகாரத்தை திருத்தம் செய்யக் கோருவது ஏற்கத்தக்கதல்ல. இவ்வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

5) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

6) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் தாவா சொத்தில் இருந்த குடிசை வீடுகள் மற்றும் மரங்களை பிரதிவாதிகள் சேதப்படுத்தி விட்டதாகவும் அதற்கு இழப்பீடாக வீட்டிற்கு ரூ.70,000/-மும், மரங்களுக்கு ரூ.5,000/-மும் மொத்தம் ரூ.75,000/- வழங்க கோரி இவ்வழக்கை திருத்தம் செய்ய வேண்டுமென அனுமதி கேட்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி மனுவிற்கு ஆட்சேபணை செய்யப்பட்டது.

7) இவ்வழக்கின் வழக்குரையை பரிசீலனை செய்கையில், ரூ.20,000/- மதிப்புள்ள குடிசை வீடுகளை பிரதிவாதிகள் சேதப்படுத்தி அழித்து விட்டதாக வழக்குரையில் கூறியுள்ளார். ஆனால் இம்மனுவில் திருத்தப்பாடு விபரத்தில் குடிசை வீடுகள் ஒவ்வொன்றும் தலா ரூ.35,000/- மதிப்பு உடையது என கூறப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கு தாக்கல் செய்த போதே தாவா சொத்தில் இருந்த மரங்களை பிரதிவாதிகள் வெட்டி விட்டதாக எந்த ஒரு தகவலும் தங்கள் வழக்குரையில் கூறப்படவில்லை. தாவா சொத்து விபரத்திலும் மரங்கள் இருப்பதாக குறிப்பிட்டு சொத்து விபரம் தாக்கல் செய்யப்படவில்லை.

8) இவ்வழக்கில் வாதி தரப்பில் ஏற்கனவே இ.ம.எண்.8/2025 திருத்தப்பாடு மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டு விளம்புகை பரிகாரமும், சுவாதீன மீட்பு பரிகாரமும் கேட்டு வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவானது 16.09.2025 ல் அனுமதிக்கப்பட்டு வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. தற்போது மனுதாரர் புதியதாக மரங்களை எதிர்மனுதாரர்கள் சேதப்படுத்தி விட்டதாக புதிய சங்கதிகளை கூறி தனது வழக்குரையை திருத்தம் செய்ய கோருவது ஏற்கத்தக்கதாக இல்லை. மேலும் இம்மனுவை அனுமதிப்பதால் புதியதான வழக்கு மூலமும், புதிய சங்கதிகளும் மற்றும் வழக்கின் தன்மையும் மாறுபடும் என எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிட்டது ஏற்கத்தக்கதாக உள்ளது. எனவே இம்மனுவை அனுமதிக்கத்தக்க முகாந்திரம் ஏதும் இல்லாததால் இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,**

இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** –இல்லை–
**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** –இல்லை–

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

************************************
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**

**I.A.No. 09/2025**
**in**
**O.S.No. 173/2022**

**DRAFT / FAIR ORDER**

**D.D.13.03.2026**

**************************************